பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
01 10 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தமது மெய்க்காவல் படையினருக்கு வைர விழா Trumpet இசைக்கருவி மற்றும் பதாகையை வழங்கினார்.
- நடப்பு நிதியாண்டில், வரிப் பகிர்வு பங்குத் தொகையாக, மாநில அரசுகளுக்கு 5 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- மத்திய அரசு ஊழியர்கள் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கான அவகாசம் நவம்பர் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- காஸா அமைதி திட்டத்தை ஹமாஸ் அமைப்பினர் ஏற்காவிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.
- உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தமது மெய்க்காவல் படையினருக்கு வைர விழா Trumpet Band இசைக்கருவி மற்றும் அதன் பதாகையை வழங்கினார்.

இந்தப் படைப் பிரிவு தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் வகையில் குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தப் பதாகை வழங்கப்பட்டது.

அப்போது பேசிய குடியரசுத்தலைவர், இந்த கௌரவம் மெய்க்காவல் படையினரின் பொறுப்புணர்வை எடுத்துரைப்பதாக தெரிவித்தார்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது துறையின் இணையமைச்சர்கள் திருமதி அனுப்பிரியா பட்டேல், திரு. பிரதாப்ராவ் ஜாதவ் மற்றும் துறை செயலாளர்களும் உடனிருந்தனர்.

அப்போது சுகாதாரம் மற்றும் ரசாயன, உரத்துறைகளின் செயல்பாடு குறித்து குடியரசு துணைத்தலைவரிடம் எடுத்துரைக்கப்பட்டதாக குடியரசு துணைத்தலைவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கிய திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டில் சமையல் எரிவாயு இணைப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை கடந்த 11 ஆண்டுகளில் 33 கோடியாக அதிகரித்துள்ளது என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

தில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், குழாய் வழி எரிவாயு கட்டமைப்பின் அளவு 2014ஆம் ஆண்டு 14 ஆயிரம் கிலோ மீட்டராக இருந்த நிலையில் தற்போது 22 ஆயிரத்து 500 கிலோ மீட்டர் தொலைவுக்கு நீட்டிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

எண்ணெய் சுத்திகரிப்பு துறையில் இந்தியா வேகமாக வளர்ந்து வரும் நாடாக உருவெடுத்துள்ளது என்றும் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டில், வரிப் பகிர்வு பங்குத் தொகையாக, மாநில அரசுகளுக்கு 5 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தைவிட 74 ஆயிரம் கோடி ரூபாய் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலகட்டத்தில், அரசின் வருவாய் 12 லட்சத்து 82 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்ததாகவும், இது நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட் மதிப்பீட்டில் 36 புள்ளி 7 சதவீதம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதில் வரி வருவாயாக 8 லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாயும், வரி அல்லாத வருவாயாக 4 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாயும் கிடைத்துள்ளது.

*கடன் அல்லாத மூலதன வரவாக, 31 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாயாக இருந்தது என்றும், பட்ஜெட் மதிப்பீட்டில் 37 புள்ளி ஒரு சதவீத அளவிற்கு செலவு செய்யப்பட்டுள்ளது.*

*முக்கியமான திட்டங்களுக்கான மானியமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளையில், நிதிப் பற்றாக்குறை 5 லட்சத்து 98 ஆயிரம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.*

**<<<<>>>>**

*மத்திய அரசு ஊழியர்கள் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கான அவகாசம் நவம்பர் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.*

*தற்போது பணியில் உள்ள ஊழியர்கள், ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் இத்திட்டத்தில் சேர தங்களது விருப்பத்தை தெரிவிக்க நேற்று வரை அவகாசம் வழங்கப்பட்ட நிலையில், இது மேலும் 2 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டிருப்பதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.*

**<<<<>>>>**

*இந்தியா - ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.*

*இந்தியா - ஐரோப்பிய தடையற்ற வர்த்தக சங்கம் இடையிலான, வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான இந்த ஒப்பந்தம், கடந்த மார்ச் மாதம் 10-ந் தேதி, புதுதில்லியில் கையெழுத்தானது.*

*சரக்குகள் விற்பனை, வர்த்தகத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல், முதலீட்டு ஊக்குவிப்பு, சந்தை அணுகல், அறிவுசார் சொத்துரிமை மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான அம்சங்கள், இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன.*

*இதன்படி, வேளாண் விளைபொருட்கள் அல்லாத பிற பொருட்களுக்கு நூறு சதவீத சந்தை அணுகலுக்கும், பதப்படுத்தப்பட்ட வேளாண் பொருட்களுக்கு வரிச் சலுகை அளிக்கவும் இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.*

*அத்துடன், அடுத்த 15 ஆண்டுகளில் நூறு பில்லியன் டாலர் அளவிற்கு இந்தியாவில் முதலீடு செய்வதற்கான உத்தரவாதமும் இதில் இடம்பெற்றுள்ளதாக, எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

**<<<<>>>>**

*காஸா போரை முடிவுக்குக் கொண்டுவர தம்மால் முடியும் என்று நம்புவதாக அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.*

*வாஷிங்டனில் நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸா பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டதாக கருதுவதாக தெரிவித்துள்ளார்.*

*தாம் அறிவித்த அமைதி திட்டத்தை ஹமாஸ் அமைப்பினர் ஏற்காவிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

**<<<<>>>>**

*மத்திய அரசின் போக்குவரத்துக் கட்டமைப்பு ஆலோசனை மற்றும் பொறியியல் நிறுவனமான RITES, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சர்வதேச சந்தையில், போக்குவரத்து சார்ந்த வர்த்தக ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.*

*ETIHAD Rail நிறுவனத்துடனான இந்த ஒப்பந்தம், அபுதாபியில் நேற்று தொடங்கிய சர்வதேச ரயில் போக்குவரத்து கட்டமைப்பு கண்காட்சி மற்றும் மாநாட்டில் கையெழுத்தானது.*

*இந்த நிகழ்ச்சியில் பேசிய RITES நிறுவனத்தின் தலைவர் திரு.ராகுல் மித்தல், சர்வதேச ரயில் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள இந்திய அரங்கு, இந்திய ரயில்வேயின் 170 ஆண்டுகால அனுபவம் மற்றும் நிபுனத்துவத்தை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளதாகக் கூறினார்.*

**<<<<>>>>**

*முப்படைகளின் தளபதிகளும், குடியரசுத்தலைவர் திருமதி.திரௌபதி முர்மு-வை சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.*

*குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்ற இந்த சந்திப்பில், முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌஹான், ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் உபேந்திர*

துவிவேதி, விமானப்படை தலைமைத் தளபதி ஏர் சீப் மார்ஷல் ஏ.பி.சிங், கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே.திரிபாதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை மூலம் கடுமையாக தண்டிக்கப்பட்ட பிறகும், இந்தியாவுக்கு எதிரான செயல்களில் பாகிஸ்தான் தொடர்ந்து ஈடுபட்டால், அடுத்தமுறை, கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று, இந்திய ராணுவம் எச்சரித்துள்ளது.

பஞ்சாபின் தரன் தரன் பகுதியில் செய்தியாளர்களிடம் பேசிய மேற்கு பிராந்திய ராணுவ கமாண்டர், லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் குமார் கதியார், சுய ஆதாயங்களுக்காக, பாகிஸ்தான் இந்தியாவுடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வருவதாகக் கூறினார்.

பஹல்காம் தீவிரவாதத் தாக்குதல் போன்ற செயல்கள் மூலம், அந்நாட்டு ராணுவ அதிகாரிகள், இந்தியாவை ஆத்திரமூட்டுவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இதனால் தான், ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கையில் ஈடுபட நேரிட்டதாகவும், அவர் குறிப்பிட்டார்.

நவீன போர் தொழில்நுட்பங்களை உள்நாட்டிலேயே உருவாக்கி வருவதுடன், ட்ரோன் தயாரிப்பு மற்றும் ட்ரோன் எதிர்ப்புக்கான புதிய தொழில்நுட்பங்களையும் இந்தியா உருவாக்கி வருவதாக, லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் குமார் கதியார் தெரிவித்தார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி மோசடி தொடர்பாக, கொல்கத்தா மற்றும் ஹௌராவில் உள்ள 10 அசையா சொத்துக்களை, அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.

15 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இந்த சொத்துக்கள், அமித் குப்தா என்பவருக்குச் சொந்தமானவை என்றும், இவரும், இவரது கூட்டாளிகளும், குழுவாக செயல்பட்டு, பெருமளவிலான சரக்கு மற்றும் சேவை வரி மோசடியில் ஈடுபட்டதையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜாம்ஷெட்பூரைச் சேர்ந்த சரக்கு மற்றும் சேவை வரி புலனாய்வுப் பிரிவு தலைமை இயக்குனர் அளித்த புகாரின்பேரில் மேற்கொண்ட விசாரணையில், ஜார்க்கண்ட், மேற்குவங்கம், மற்றும் தில்லியில், 135 போலியான நிறுவனங்களின் பெயரில் சட்டவிரோதப் பணப்பரிவர்த்தனையில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளதாக, அமலாக்கத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

இங்கிலாந்தில், மகாத்மா காந்தி சிலை சேதப்படுத்தப்பட்டது தொடர்பாக, விசாரணை மேற்கொண்டு வருவதாக, லண்டன் பெருநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

லண்டன் நகரின் Tavistock சதுக்கத்தில் உள்ள இந்த வெண்கல சிலையின் பீடம் சேதப்படுத்தப்பட்டதுடன், இந்தியாவுக்கு எதிரான வாசகங்களும் அதில் இடம் பெற்றிருந்தது.

இந்த செயல் அமைதி மற்றும் அஹிம்சை கொள்கைகளுக்கு எதிரான தாக்குதல் என்று, லண்டனில் உள்ள இந்திய தூதரகம் கண்டனம் தெரிவித்த நிலையில், அந்நாட்டு காவல்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் Sumit Antil மற்றும் Sandip Sanjay Sargar ஆகிய இருவரும் தங்கப் பதக்கம் வென்றனர். சந்தீப் சௌத்ரி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

உலகக் கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 59 ரன் வித்தியாசத்தில் இலங்கை அணியை வென்றது.

குவஹாத்தியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 47 ஓவராக குறைக்கப்பட்டது.

*முதலில் களமிறங்கிய இந்திய அணி 8 விக்கெட் இழப்பிற்கு 269 ரன் எடுத்தது.*

*அதிகபட்சமாக Amanjot Kaur 57 ரன்னும் தீப்தி ஷர்மா 53 ரன்னும் எடுத்தனர்.*

*பின்னர் டக்வொர்த் லூயிஸ் முறையில் இலங்கை அணி வெற்றி பெற 271 ரன் இலக்கு ரன் நிர்ணயிக்கப்பட்ட நிலையில், அந்த அணி 45 புள்ளி 4 ஓவரில் 211 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.*

**<<<<>>>>**